RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2269

# அகநானூற்றில் செலவழுங்கல்

ஆ. ராஜேஸ்வரன் [அ, *], அ. செந்தில் நாராயணன் [அ]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா

# Expenditure in Akananuru

A. Rajeshwaran [a, *], A. Senthilnarayanan [a]

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: pavithraa0501@gmail.com

Received: 19-09-2022
Revised: 23-11-2022
Accepted: 29-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Sangha literature has the characteristics of ancient Tamil biographies. Akananuru is one among them. Some of Akananuru's songs contain references about the expenditure which Thalaivan spends. These expenses are incurred on the basis of education, security, courier, material search etc. Seperation of hero causes immeasurable suffering to the heroine. Some songs of Akananuru belong to Paalai land one among the five land forms. Paalai land has the meaning of parting and parting. The situation of the hero moving away from heroine for expenditure are verh clearly explained in Akananuru songs. Expenditure is one of the virtues of homemaking. The hero's love for heroine is revealed by intervening in the expenditure sectors. The department of expenditure emphasizes worldliness. Man's search for material is special and noble but more than that he should give importance to his wife and it is considered to be most important in the expenditure sector. The specialty of youth is known in expenditure. In the songs of Akananuru, the hero who spends his time with his chest is known by the language of heroine. This article is designed in a characteristic approach. This article define the psychological struggle of both hero and heroine and explore the ecology of the hero's expenditure in the Akananuru songs.

**Keywords:** Akananuru, Ecology, Paalai, Thalaivan

## முன்னுரை

அகநானூற்றில் அகவாழ்வியல் செய்திகள் நிரம்ப இடம்பெற்றுள்ளது. அகநானூற்றின் அகத்துறைகள் புலவர்களின் சிந்தனை வளமாகும். சங்ககால மன்னர்களின் வரலாற்றுச் செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. தோழி தலைவனிடத்து தன் கூற்றினை எடுத்துரைத்து, பிரிவை தடுத்து நிறுத்தல் என்னும் செயலானது செலவழுங்குவித்தல் என்பதாகும். வரைவு கடாதல், அறத்தொடு நிற்றல் என்னும் வகைமைகளுனுள், செலவழுங்கல் துறையும் ஒன்றாகும். செலவழுங்கல் என்னும் சொல்லுக்கு, "நிலவுபோல ஒளிவிடும் வேலினையும் பெரிய மேம்பாட்டினையும் உடையவன் உயர்ந்த மூங்கிலியைந்த வழியிடைப்போவானாக முன்னே நிச்சயித்துப் போக்கு ஒழிந்தது" என்னும் பொருளை அபிதான சிந்தாமணி தருகின்றது.

## தலைவியின் குறிப்பு மொழிகளால் தலைவன் செலவழுங்கல்

தலைவியைப் பிரிந்தால் அவளுக்கு உண்டாகும் துயரினை தலைவன் நன்கு அறிவான். இச்சூழலில் தலைவன் செலவு மேற்கொள்ள எண்ணுமிடத்து, தலைவியின் குறிப்புமொழிகளாக,

“நின் வாய்

வாய்போல் பொய்ம்மொழி எவ்வம் என் களைமா -

கவிர் இதழ் அன்ன காண்பு இன் செவ் வாய்,

அம் தீம் கிளவி, ஆய் இழை, மடந்தை

கொடுங் குழைக்கு அமர்த்த நோக்கம்

நெடுஞ் சேண் ஆர் இடை விலங்கும் ஞான்றே?”

தலைவியின் பார்வையினால் செலவழுங்கியதை அறியப்படுகின்றது (Jeyabal, 2017). ஆடவருக்கு பொருள் வளம் இன்றியமையாததாகும். பொருள் காரணமாக தலைவன் பிரிவான். இச்சூழலில் தலைவியின் மனம் வருந்துவதனை வள்ளுவர்,

“அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்

பிரிவோ ரிடத்துண்மை யான்”

கூறுகின்றார் (Devaneya Pavanar, 2007).

## தலைவியின் மெய்ப்பாடுகளால் தலைவன் செலவழுங்குதல்

அகநானூற்றுத் தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டு தலைவியை பிரியக் கருதினான். இப்பிரிவினை அறிந்த தலைவிக்கு உடன்பாடில்லை. அதனால், தலைவியின் பெருமூச்சின் வெப்பத்தால் செங்கழுநீர் மாலையானது நிறம் மாறியது. இதைக் கண்ட தலைவன், தலைவியை நாம் இத்தருணத்தில் பிரிந்தால், தலைவியின் உயிர் பிரிதல் உறுதி என்பதை அறிந்து தலைவிக்காக செலவழுங்கும் சூழலை,

“ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி,

பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,

ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன் தலைத்

தூ நீர் பயந்த துணை அமை பிணையல்

மோயினள் உயிர்த்த காலை, மா மலர்

மணி உரு இழந்த அணி அழி தோற்றம்

கண்டே கடிந்தனம், செலவே - ஒண்டொடி

உழையம் ஆகவும் இனைவோள்

பிழையலள்மாதோ, பிரிதும் நாம் எனினே!”

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Jeyabal, 2017).

தலைவன் செலவழுங்கும் சூழலியலை தொல்காப்பியர் பொருளதிகாரத்துள்

“செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே

வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்”

கூறுகின்றார் (Ilampuranar, 2019).

## காலமறிந்து செலவழுங்கல்

ஒருவனது வாழ்வில் காலம் என்பது இன்றியமையாததாகும். ஒரு மனிதனின் உயர்வு தாழ்வினையும், இன்ப துன்பத்தினையும் அவரவர் காலச்சூழலே தீர்மானிக்கின்றது. குறித்த பருவத்தில் தலைவன் வாராவிடில், தலைவி பிழைத்திருக்கமாட்டாள் என்பதன் வழி காலத்தின் வலிமையை அறியப்படுகின்றது. உரிய பருவத்திற்குள் வெற்றிகரமாக செயலினை செயல்படுத்தாவிட்டால் பாதகமான விளைவுகளையே தரும். காலத்தின் வலிமையை வள்ளுவர்,

"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்

தீராமை ஆர்க்கும் கயிறு"

கூறுகின்றார் (Devaneya Pavanar, 2007).

செலவழுங்கல் குறித்து வ.சுப.மாணிக்கம், "இளங் காதலர்களுக்குப் பிரிதல் என்பது முகவாட்டமும் உயிர்வாட்டமும் தரும் கொடுஞ் செயலாகும். பருவத்தாரின் இம் மனநிலை பருவம் வாராதார்க்குத் தோன்றாது, பருவம் கழித்தார்க்கோ மறந்து போகும் (Manickanam, 2012). "உயிர்த்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந்.18) என்றபடி, தலைவி ஆழ்ந்து அகன்று அடங்கிய காமச் செறிவு உடையவள்; "நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த நற்றோள்" (அகம்.41) என்னுமாறு, பிரிவென்ற ஒரு நிலையுண்டு என்பதையே அறியாதவள். இம் மடமகளின் ஒப்புதலின்றிப் பிரிந்து செல்லல் தலைவனுக்கு இயலாத, கூடாத காரியம். மின்விளக்கனைய பெண்மை மெல்லியல் என்றும், எண்ண அதிர்ச்சி தாங்காதது என்றும் உணர்ந்த தலைவன் மெத்தென்ற நயப்பாடுகளால் பிரிவுக் குறிப்பைத் தலைவி உணரச் செய்வான்." கூறுகின்றார்.

தலைவன் இல்லாத மாலைப்பொழுது தலைவிக்கு துன்பம் தருவதாக வள்ளுவர்

"மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத

காலை அறிந்தது இலேன்" (Devaneya Pavanar, 2007)

கூறுகின்றார். கார்காலப் பருவத்துக்குள் பொருள் காரணமாக பிரிந்த தலைவன் இல்லம் வர வேண்டும் என தலைவி எண்ணுவதனை, அகநானூற்றுப் பாடல்களில் அறியப்படுகின்றது.

## தலைவனின் அக உணர்வுகள்

அகப் பாடல்களில் தலைவனின் அக உணர்வுகள் சிறப்புடையதாகும். பொருள் ஈட்ட வேண்டுமென்ற எண்ணங்களும், அப்பொருளினால் கிடைக்கும் புகழினையும் எண்ணி தலைவன் பிரிவு மேற்கொள்ள நினைக்கின்றான். இச்சூழலில் தலைவி தன் பிரிவுக் காலம் வரை ஆற்றியிருப்பாளா? என்னும் எண்ணம் அவன் மனதில் தோன்றுகிறது. தன் பிரிவினை தலைவியிடத்து கூறும் வலிமை உள்ளதா என்பதை அறிந்து, பின் உன் பிரிவினை மேற்கொள்ளலாம் என தலைவன் நெஞ்சம் அவனிடத்து வினவுவதனை,

"அரும்பொருள் நசைஇ, பிரிந்துஉறை வல்லி,

சென்றுவினை எண்ணுதி ஆயின், நன்றும்,

உரைத்திசின் வாழிஎன் நெஞ்சே!-`நிரைமுகை

முல்லை அருந்தும் மெல்லிய ஆகி,

அறல்என விரிந்த உறல்இன் சாயல்

ஒலிஇருங் கூந்தல் தேறும்'என,

வலிய கூறவும் வல்லையோ, மற்றே?"

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Jeyabal, 2017).

தலைவன் மேற்கொள்ளவிருக்கும் பிரிவு குறித்து நாற்கவிராச நம்பி,

“பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை

பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்

பிரிவுழிக் கலங்கல் வன்புறை”

இந்நூற்பாவில் கூறுகின்றார் (Govindtharasa Muthaliyar, 2019).

தலைவன் பொருட்செல்வத்துக்காக பிரிதல் என்பது இயல்பானதாகும். அப்பொருள் அவனுக்கு புகழினைத் தரும் என்பதனை வள்ளுவர்,

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு”

கூறுகின்றார் (Devaneya Pavanar, 2007).

தலைவனது நெஞ்சம் பொருள் ஈட்ட வேண்டும் என தலைவனை கட்டாயப்படுத்துகிறது. இச்சூழலில் தலைவன் நெஞ்சிடத்து தன் பிரிவை, தலைவி இல்லத்தின்கண் பொறுமையோடு தங்கியிருக்க வேண்டும் என்னும் மனவலிமை உடையவள் தானா? என்பதனை நீ அறிந்தால் இவளை விட்டு செல்லலாம் எனக் கூறுவதன் வழி தலைவன் செலவழுங்கும் நிலையினை,

“உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்

நன்றுபுரி காட்சியர் சென்றனர், அவர்' என

மனைவலித்து ஒலியும் மதுகையள் ஆதல்

நீநற்கு அறிந்தனை ஆயின், நீங்கி”

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Jeyabal, 2017).

## தலைவியின் நலனே பெரிதென தலைவன் செலவழுங்குதல்

அகநானூற்றுத் தலைவனுக்கு பொருள் தேடி கானகம் வழியே செல்வதும், பாலைநிலக் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு எளிதாக செயலாற்ற முடியும். தன் பிரிவினால் தலைவிக்கு உண்டாகும் பிரிவாற்றாமையை எண்ணித் தலைவன் செலவழுங்கியதனை,

“சுரன்நமக்கு எளிய மன்னே; நல்மனைப்

பல்மாண் தங்கிய சாயல், இன்மொழி,

முருந்துஏர் முறுவல், இளையோள்

பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே”

இப்பாடலில் அறியப்படுகின்றது.

தலைவனது செலவு குறித்து நாற்கவிராச நம்பி,

கல்வி முதலா எல்லா வினைக்குஞ்

சொல்லி அகறலுஞ் சொல்லா தகறலும்

உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு”

கூறுகின்றார் (Govindtharasa Muthaliyar, 2019).

இல்லறச் சிறப்பினை கூறுமிடத்து வள்ளுவர்,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

இல்லறத்தினை ஒருவர் அறவழியில் மேற்கொள்வாராயின் அவர் தெய்வத்தன்மை பொருந்தியவரென கூறுகின்றார் (Devaneya Pavanar, 2007).

ஆண் யானையானது சினம் மிகுந்து தன் கொம்புகள் ஒடியப் பாய்ந்து, கொடிய வெயிலில் தன் பெண் யானையை உண்ணுமாறு, உலர்ந்த இலைகள் உடைய யாமரத்தினைக் குத்தி அதன் பட்டையைக் கிழித்து ஊட்டும் அன்புடைய நிலையும், வறண்ட பாலைநிலத்தில் நிலம் பிளந்து கிடக்கும் வெம்மையான சூழலும், இச்சூழலில் தலைவியை உடன் அழைத்துச் செல்வது இயலாத செயல், என தன் நெஞ்சிடத்து வினவிய தலைவன் செலவழுங்குதலை,

"யானை தன்

கொல்மருப்பு ஒடியக் குத்தி, சினம்சிறந்து,

இன்னா வேனில் இன்துணை ஆர,

முளிசினை மராஅத்துப் பொளிபிளந்து ஊட்ட,

புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்

அரிய அல்லமன், நமக்கே"

இப்பாடலில் அறியப்படுகின்றது (Jeyabal, 2017).

தலைவன் இல்லத்தினும், இடைச்சுரத்தினும் செலவழுங்குவான் என்பதனை,

"இல்லத் தழுங்கலும் இடைச்சுரத் தழுங்கலும்

ஒல்லும் அவற்கென உரைத்திசி னோரே"

இந்நூற்பாவில் அறியப்படுகின்றது. மேலும்,

"தலைவி தன்னையும் தன்மனந் தன்னையும்

அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது

செல்வத் தோன்றல் செல்லா னல்லன்"

தலைவியின் நினைவு தோன்ற தலைவன் செலவழுங்குதலும், தலைவியை விட்டுப் பிரியும் தன் மனதினை ஆற்றுப்படுத்த இயலாமலும் தலைவன் செலவழுங்குதல் இந்நூற்பாவில் அறியப்படுகின்றது (Govindtharasa Muthaliyar, 2019).

தலைவன் கல்விகற்றல், தூது உள்ளிட்ட ஐந்து வகையான பிரிவின்கண் தலைவன் செல்வதும், செல்லாமல் செலவழுங்குவதனையும்,

"ஓதல் முதலா ஓதிய ஐந்தினும்

பிரிவோன் அழுங்கற்கும் உரிய னாகும்"

இந்நூற்பாவில் அறியப்படுகின்றது.

## முடிவுரை

அகநானூற்றில் செலவழுங்கும் தலைவனின் உளப்போராட்டம் இவ்வாய்வில் விரிவாக கூறப்பட்டுள்ளது. தலைவிமேல் தலைவன் கொண்ட அன்பினாலும், தலைவிக்கு தன் பிரிவினால் உண்டாகும் பிரிவாற்றாமையை நினைந்து, தலைவன் தன் மனதுக்குள் போராடிய சூழலும், இறுதியில் தலைவன் செலவழுங்குதல் என்பது இல்லற விழுமியமாக அகநானூற்றுப் புலவர்களின் பாடல்களில் அறியப்படுகின்றது. பழந்தமிழரின் சிந்தனை வளமும், அவர்தம் கடமையும், செயல்திறனும்

இப்பாடல்களில் ஆராயப்பட்டுள்ளன. தலைவன் செலவழுங்குதலுக்குரிய காரணங்கள் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

## References

Devaneya Pavanar, (2007) Thirukural Tamil Maraburai, Sri Indhu Publications, Chennai, India

Govindtharasa Muthaliyar, K.R. (2019) Agaporul Vilakkam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Ilampuranar, (2019) Tholkappiyam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Jeyabal, R. (2017) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Manickanam, V.S. (2012) Tamil Kadhal, Meyyappan Pathippagam, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License